**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2019**

-----------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (VbgP) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின்154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தற்போது பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைநிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோர மற்றும் நாடளாவிய நீர்த் தரத்தின் விளைவாக தூய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனூடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள 1.5 மில்லியன் நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர அபிவிருத்தி மற்றும் பொதுச்சுகாதாரத்தை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 12597.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110.24 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10783.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 1813.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச்சட்டத்தின் பிரிவு 6 (01) இன் படி | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயமுடைய ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதிலிருந்து 60 நாட்களிற்குள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்ய வேண்டும் மேலும் ஒப்பந்த உடன்படிக்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் கட்டுமான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை | ஒப்பந்ததாரரிற்கு எதிராக சட்டம், வரி தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கும் | சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்பது. | ஒப்பந்ததாரர் சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

செயற்திட்டமானது 9 ஏப்ரல் 2010 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 31 திசம்பர் 2014 இல் அதனை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பொழுதிலும் கடன் முகவர் வழங்கிய ரூபா. 10,783.65 மில்லியனிற்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 94.37 இல் ரூபா. 10,417.30 மில்லியனிற்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 70.88 மில்லியனை மட்டுமே 31.திசம்பர் 2019 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் உஞ்சியுள்ள 12 மாத காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையினையும் பயன்படுத்துதல் சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

| உள்ளடக்கம் | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| **க**கழிவுநீர் வலையமைப்பை தரமுயர்த்தல் அ) வானதமுல்ல கழிவநீர் வலையமைப்பை தரமுயர்த்தல். | ஒப்பந்ததாரர் வேலைத்தளத்தில் வேலையை நிறைவேற்றாது முடிவுறுத்தியதன் காரணமாக ஒப்பந்தமானது 30 யூன் 2017 இல் முடிவுறுத்தப்பட்டது. மிகுதி வேலையை நிறைவேற்ற எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் 2019 திசம்பர் 31 இல் 68 வீதமான பௌதீக வேலையே நிறைவேற்றப்பட்டிருந்தது. | திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மேலதிக கிரயமும் காலமும் தேவைப்படும். | வனாதமுல்ல கழிவு நீர் வலையமைப்ப வேலையானது வேறு கழிவு நீர் வலையமைப்பு வேலையில் ஈடுபடும் ஒப்பந்ததாரருக்கு variation Order வழங்கப்படவள்ளது. | செயற்திட்ட முகாமைத்துவ அலகானது சீரான கண்ணகாணிப்பு மேற்பார்வை முறைமைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். |
| ஆ) மூன்று பிரதான பம்புகள் மற்றும் எட்டு பம்பு நிலையங்களின் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் புனரமைப்பு. | கொழும்பு நகரப்பகுதியின் மூன்று பிரதான பம்புகள் மற்றும் எட்டு பம்பு நிலையங்கள் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் யூலை 2015 அல் வழங்கப்பட்டிருந்ததுடன் இது 26 பெப்ரவரி 2018 இல் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்த செயற்றிறன் வீதமானது 15 வீதத்திலிருந்து 2019 திசம்பரில் உள்ளவாறான 96 வீதம் வரை வேகமின்மையாகவே காணப்பட்டது. செயற்றிட்டத்தின் காலப்பகுதியானது மூன்று தடவைகள் 31 திசம்பர் 2020 வரை நீடிக்கப்பட்டிருந்த பொழுதிலும்கூட ஒதுக்கப்பட்ட மிகுதித் தொகையான ஐக்கிய அமெரிக்க டொலர் 25 மில்லியன் கடன் தொகையை பயன்படுத்தி கடன் முடிவுத்திகதியான 31 டிசம்பர் 2020 இற்குள் மிகுதி வேலையை முடித்தல் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. | a) செயற்திட்டம் நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அடையவேண்டிய நோக்கம், செயற்பாடுகள் அடையப்படமாட்டாது.<br><br>b) கடன் முடிவடையும் திகதியான 31 டிசம்பர் 2020 ற்கு முன்னர் கடன் தொகையினை முழுமையாக பயன்படுத்துவதில் இடர்காணப்படுகின்றது. | 2020 டிசம்பர் 31ற்கு இப்பால் எஞ்சியுள்ள வேலையை செய்வதற்கான சாத்தியப்பாடு குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செயற்றிட்ட முகாமைத்துவ அலகும் அமைச்சும் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன. | செயற்றிட்டம் காலாவதியாவதற்கு முன்னர் செயற்றிட்'ட வேலைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் சுற்றாடல் ஆய்வுகூடத்தில் ஆய்வுகூட உபகரணம் 3 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தாமை கண்டுபிடிக்கப்பட்டது. | அ) ஆய்வுகூட உபகரணம் தொடர்பாக மோசடி நோக்கத்திற்கான சாத்தியப்பாடு மற்றும் பலனற்ற கடன் பயன்பாடு.<br><br>ஆ) பயனற்ற வெளிநாட்டுக்கடன் பயன்பாடு. | இருப்பு வகைகள் சோதனைத் தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு மாநகர சபையின் வேண்டு கோளிற்கிணங்க விநியோகிக்கப்பட்டது. | பயன்படுத்தப்படாதிருக்கம் உபகரணம் மற்றும் பொறுப்பான அலுவலர்களை அடையாளம் காணவும் ஆய்வுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் |

### 3.3 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|
| சுற்றாடல் அதிகாரி 22 ஒக்டோபர் 2018 இல் செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளார்.கடன் ஒப்பந்தத்தின்படி செயற்திட்டத்தின் சுற்றாடல் செயற்திறன் ஒழுங்காக கண்காணிப்புச் செய்யப்படவேண்டும் அதன்மேலான அறிக்கைகள் ஆண்டிற்கு இருமுறை கடன் முகவருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். | செயற்திட்டத்தின் வேலை தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு ஒழுங்குமுறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் மேற்பார்வை தொடர்பான தேவைப்பாடுகளை உறுதிசெய்ய தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் வேலைகளானது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்ததால் இத்தேவைப்பாடானது கட்டாயமானது. ஆகையால் சுற்றாடல் அதிகாரியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| தொழில் நிலைகள் | புதவிகளின் எண்ணிக்கை | | | விளைவு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டது | 2019 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்கள் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவ அலகு | | | | செயற்திட்டத்தின் சீரானவேலைத் தொழிற்பாடுகள்பாதிக்கப்படும். | அட்டவணையில் குறிப்பிட்டதன்படி ஒவ்வொரு செயறிட்டத்திற்கும் தனியான உழியப்படை இல்லை. செயற்றிட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் புஊறுறுஆஐஜீ மற்றும் புஊறுஆீ ற்கு ஒதுக்கப்பட்ட அலுவலர்களினாலேயே மன்னெடுக்கப்படுகின்றது. | பிரதான 12 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| 01.செயற்திட்ட துணை இயக்குநர் (பொறியியல்) | 02 | 01 | 01 | | | |
| 02.செயற்திட்ட பொறியியலாளர் (கொள்ளல்) | 01 | - | 01 | | | |
| 03.செயற்திட்ட பொறியியலாளர் | 10 | 07 | 03 | | | |
| 04. சுற்றாடல் அதிகாரி | 01 | - | 01 | | | |
| 05. செயற்றிட்ட செயலாளர் | 02 | 01 | 01 | | | |
| 06. செயற்திட்ட உதவி பொறியியலாளர் – II | 07 | 05 | 02 | | | |
| 07. முகாமைத்துவ உதவியாளர் | 05 | 03 | 02 | | | |
| 05.கட்டுமான முகாமையாளர் - I | 02 | 01 | 01 | | | |
| | ------ | --------- | -------- | | | |
| | **30** | **18** | **12** | | | |